## விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

I ஆம் பகுதி

## விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 219 | விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களம் |

### 2. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2010 திசெம்பர் 31 அளவில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் கணக்காண்டின் ஆரம்பத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத அதேவேளை 2010 சனவரியிலிருந்து ஏப்ரல் வரையும் மற்றும் மே மாதத்திலிருந்து யூலை மாதம் வரையும் மாத்திரம் வெவ்வேறாக இரண்டு செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 3. கணக்குகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான 02 ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் திணைக்களத்திற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,389,084,390 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 1,218,823,919 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நிதி ஏற்பாடுகளில் தேறிய சேமிப்பு ரூபா 71,796,517 இற்கும் ரூபா 98,463,954 இற்கும் இடைப்பட்ட விச்சுடைய அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 17 சதவீதத்திற்கும் 10.18 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | தேறிய நிதி ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 136 | விளையாட்டுத் துறை | 197,441,390 | 224,815,000 | 191,700,779 | 158,759,094 | 5,740,611 | 66,055,906 |
| 219 | விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களம் | 299,603,000 | 667,225,000 | 291,648,985 | 576,715,061 | 7,954,015 | 90,509,939 |
| | மொத்தம் | 497,044,390 | 892,040,000 | 483,349,764 | 735,474,155 | 13,694,626 | 156,565,845 |

## 3.2 முற்பணக் கணக்குகள்

### 3.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்க்காகத் தயாரிக்கப்படவேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 02 முற்பணக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆம் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) எல்லைகளைப் பின்பற்றல்

அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

## 3.3 பொதுவைப்புக் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் மற்றும் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 55,131,137 கூட்டுமொத்தமாகக் காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| | | காலப்பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|
| அமைச்சு/ திணைக்களம் | ஒதுக்கீட்டுத் தலைப்பு | 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளுக்கு குறைய | 2 ஆண்டுகளுக்கு மேல் 5 ஆண்டுகளுக்கு குறைய | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விளையாட்டுத்துறை அமைச்சு | 136 | 5,727 | 1,342,187 | - | 1,347,914 |
| விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 219 | 34,661,916 | 16,299,452 | 2,821,855 | 53,783,223 |
| | | 34,667,643 | 17,641,639 | 2,821,855 | 55,131,137 |

# II ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு

விளையாட்டுத்துறை அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தெம்பர் 26 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்

கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணைக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(1) அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| ஏடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபம், 2004 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபம் மற்றும் நிதிப்பிரமாணம் 802 | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 18 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### (ஆ) பாதீட்டு முரண்

(i) தலைப்பு 136 இன் கீழ் 05 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 695,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேகரிக்கப்பட்டிருந்தது.

(i) 12 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 99 சதவீதத்திற்கும் 26 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தன.

(ii) 03 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,700,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டு ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

### (இ) பொதுவைப்புக் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதி ரூபா 1,347,914 ஆக இருந்ததுடன் 2009 மே 22 ஆந் திகதி விளையாட்டு நிதியத்திற்கு தனிப்பட்ட தொலைக்காட்சி நிறுவனத்திடமிருந்து கிடைத்த ரூபா 1,268,290 தொகை பொதுவைப்புக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது.

### (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

(i) 13601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவீடு நிலுவையாக காணப்பட்ட மீதிகள் ரூபா 71,484 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் இந்த மீதி 2008 சனவரி 18 ஆந் திகதி சேவையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தருக்குரியதாகும். அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் திணைக்கள ஏடுகளின் படியான மீதி ரூபா 14,869,937 ஆக இருந்ததுடன் திறைசேரி ஏடுகளின் படியான மீதி ரூபா 15,045,435 ஆக இருந்தது. இதற்கிணங்க ரூபா 175,498 தொகையான வேறுபாடு ஒன்று காணப்பட்டதுடன் இந்த வேறுபாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

(iii) ஏனைய திணைக்களங்களிலிருந்து அமைச்சிற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள 05 உத்தியோகத்தர்களின் ரூபா 1,827,468 கூட்டுமொத்தமான ஆரம்பகடன் மீதியானது அங்கத்தவர் கடன் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 2,274,232 ஆக இருந்ததுடன் அப்பொறுப்புக்கள் 01 ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியதாகும்.

## 1.5 வங்கி கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்

### செம்மையாக்கப்பட வேண்டிய மீதி

2010 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மையாக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| செம்மையாக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 3 ஆண்டுகளுக்கு குறைய | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்ட ஆனால் | | | |

| | | | |
|---|---|---|---|
| கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 12,154 | 92,805 | 104,959 |

## 1.6 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 08 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 23 | 10 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 22 | 13 | 09 | - |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 08 | - | 08 |
| | மொத்தம் | 66 | 53 | 21 | 08 |

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 219 - விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தெம்பர்

26 ஆந் திகதி திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(i) திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள ஏடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில ஏடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபம் 2004 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபம் மற்றும் நிதிப் பிரமாணம் 802 | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. இது கடந்த ஆண்டுகளுக்கான அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. |
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிர்வாக அறிக்கை | 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காமை. செலவுகளுக்காக அங்கீகாரம் இல்லாமை, செய்த வேலைகள் அறிக்கை இல்லாமை, உரிய பெயர்ப்பதிவேடு இல்லாமை, அமைச்சரவை அங்கீகாரம் ஆகிய தேவையான சான்றுகள் திணைக்களத்தில் இல்லாமையின் காரணமாக ரூபா 5,290,724 கூட்டுமொத்த தொகைக்குரிய 07 கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகக் சான்றுறுதிசெய்ய முடியாதிருந்தது.

(iii) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2011 மார்ச் 31 ஆந் திகதி

வரையும் பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அக்கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான கணிப்பிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 396,135,969 ஆக இருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 219 இன் கீழ் 02 செலவு விடயங்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ரூபா 6,850,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 செலவு விடயங்களுக்காக மிகையாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் 80 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தன.

(iii) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மீண்டுவரும் செலவுகளுக்கான 5 உத்தரவுப் பத்திரத்தின் மூலம் கிடைத்த ரூபா 3,700,000 தொகையான மாற்றங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொதுவைப்புக் கணக்கு**

(i) 02 ஆண்டுகளினை மிகைத்த ரூபா 2,821,855 தொகையான 14 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 427 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கு மீதிகள் திறைசேரி ஏடுகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 565(4) இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்குமாக புதிய வைப்புப் பேரேடு ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு விடயமாக கடந்த ஆண்டுகளுக்கான மீதி முன்கொண்டுவரப்படவேண்டிய போதிலும் வைப்புப் பேரேடு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகள்

தொடர்பாக ஒரே பேரேடு பேணப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு விடயத்திற்குமான மீதிகள் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 565(3) இன் பிரகாரம் பேரேட்டின் கடைசிப் பக்கங்களில் சில ஒதுக்கப்பட்டு சமப்பாட்டுக் கணக்கு ஒன்று தயாரிக்கப்படவேண்டிய போதிலும் அந்த மாதாந்த சமப்படுத்தல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப்பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்குமாக பொது 71 படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய மாதாந்த வைப்புக்கள் பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

21901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 169,625 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அவ்வாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) 1994 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 96 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.1 ஆம் பந்தியின் பிரகாரம் கடனை தள்ளுபடி செய்தல் மற்றும் அதற்குரிய வட்டியினைப் பதிவுசெய்வதற்காக சீசீ 10 பதிவேடு பேணப்படவேண்டிய போதிலும் கடனைத் தள்ளுபடி செய்தல் தனியான பதிவேட்டிலும் வட்டியினை அறவீடு செய்தல் தனியான பதிவேட்டிலும் பதியப்பட்டிருந்தன.

(iii) நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் அமைய மற்றும் நாளாந்தம் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களைத் தவிர ஏனைய அனைத்து பதவியணியினருக்காக சம்பளப் பதிவேட்டினைப் பேண வேண்டிய

போதிலும் அப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. கணனி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதாந்த தரவுகளை மாத்திரம் உள்ளடக்கிய அறிக்கை பேணப்பட்டிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2008 நவம்பர் 19 ஆந் திகதிய 436 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டு தொடர்பாக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படாதிருந்ததுடன் இறுதியாக 2009 ஆம் ஆண்டு தொடர்பாகவே பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது.

### (ஆ) களஞ்சியத்தினைப் பேணுதல்

தலைமை அலுவலக வளவிலும் ரீட் மாவத்தை விளையாட்டுத் தொகுதி கட்டிடத்தில் பல இடங்களிலும் களஞ்சியம் பேணப்பட்டு வந்ததுடன் ரீட் மாவத்தை விளையாட்டுத் தொகுதியில் காணப்பட்ட களஞ்சிய அறை முறைப்படியாக தயார்படுத்தப்படாததன் காரணமாக மழை நீர் கசிந்து சில பொருட்கள் பழுதடைந்திருந்தன.

### (இ) இறுதி இருப்பினை கணிப்பீடுசெய்தல்

20 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவற்றில் விலைகள் குறிப்பிடப்படாதிருந்ததன் காரணமாக பெறுமதியினைக் கணப்பீடு செய்யமுடியாதிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 3,455,625 பெறுமதியான பொருட்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டன. அவை மொத்த கொள்வனவில் 54% அளவிலான பெறுமதியினைக் கொண்டிருந்தன.

### (ஈ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 13,458,162 ஆக இருந்ததுடன் அப்பொறுப்புக்கள் ஒரு ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியவையாகும்.

## 2.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் | | |
| | நி.பி 94 | 12,447,920 | வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகள் போதியளவில் இருந்தாலே தவிர எதுவிச் செலவுகளோ அல்லது பொறுப்புக்களோ மேற்கொள்ளமுடியாது என்ற போதிலும் செலவு மேற்கொண்டதன் பின்னர் சேமிப்புக்களுக்கு மிகையாக 06 சந்தர்ப்பங்களில் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | நி.பி 395(இ) | - | பணமாக மாற்றப்படாத காசோலைகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட வேண்டிய பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி 735(2) | - | 219 ஆவது பொதுப் படிவத்தின் பிரகாரம் பொருள் பெறுவனவுப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ii) சுற்றுநிருப ஏற்பாடுகள்**

**திறைசேரி சுற்றுநிருபம்**

| | | |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினைத் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல் கோவை (பாதீட்டுச் சுற்றுநிருபம் 143) | 1,064,626 | உள்ளபடியான பதவியினர் தேவைப்பாட்டின் பிரகாரம் ஆளணி வேதனம் கணிக்கப்பட வேண்டிய போதிலும் ஆளணி, வேதனமானது வெற்றிடங்களின் எண்ணிக்கையினையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டதன் காரணமாக செலவு விடயம் 219-01-01-1001 இலுள்ள பணம் சேமிக்கப்பட்டிருந்தன. |
| 2010 நவம்பர் 04 ஆந் திகதிய 06/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.1 ஆம் பந்தி | - | காசேட்டினை தீர்ப்பதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் நியமிக்கப்படாதிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் எந்த நபரினாலும் காசேடு தீர்க்கப்பட்டு பெயர் மற்றும் பதவியினைக் குறிப்பிட்டு கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை இடையில் கைவிடல், பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்படாத செயற்திட்டம் என்பன தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

டொரிங்டன் விளையாட்டு மைதானத்தில் செயற்கையான ஓடு பாதையினை நிர்மாணிப்பதற்காக ரூபா 100,000,000 நிதி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த அதேவேளை ரூபா 93,200,000 ஏனைய 04 செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 6,800,000 தொகையான எஞ்சிய நிதி ஏற்பாடு எச்செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தாமைக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. 2010 சனவரி மாதத்தின் போது இச்செயற்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக ரூபா 4,166,810 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்திட்டங்களை இடையில் கைவிடல்**

நுவரெலியா குதிரை ஓட்டப் போட்டி மைதானத்தினை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 227,670,000 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 190,307,274 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கை 2010 ஆகஸ்ட் இலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் போதிய செயல்முன்னேற்றத்தினைப் பெற்றுக்கொள்ளாத செயற்திட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் 2008 செப்தெம்பர் 15 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 2009 யூன் 30 ஆந் திகதியளவில் வேலையினைப் பூர்த்திசெய்வதற்கு இணங்கியிருந்த ரீட் மாவத்தை செயற்கை ஹொக்கி விளையாட்டு மைதானம் 2011 ஏப்ரல் வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் ஆலோசனைச் சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்பந்த பெறுமதியில் 3% - 6% வரை இணங்கியிருந்த போதிலும் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு மாற்றமாக 10% ஆலோசனை சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**2.4 செயலாற்றல்**

2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு/ செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பு கீழே தரப்படுகின்றன.

## (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பணிகள்

குறித்த சில பிரதான செயற்பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

**விளையாட்டுச் சக்தி நிகழ்ச்சித்திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) ''சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகொள்ளக்கூடிய ஆற்றல்களைக் கொண்டுள்ள விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை உருவாக்குதல்'' விளையாட்டு சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தூரநோக்காக இருந்த போதிலும், மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கபடி விளையாட்டுக்கள், உதைபந்தாட்டம் என்பவற்றைத் தவிர்த்து ஏனைய விளையாட்டுக்கள் சில மாவட்டங்களில் (3-4 வரையில்) மாத்திரம் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஆகவே செயற்திட்டத்தின் குறிக்கோளினை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(ii) மேற்கூறிய விபரத்தின் படி பல விளையாட்டுக்கள் குறித்த சில மாவட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றினை அனைத்து மாவட்டங்களிலும் விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்கூறிய ஒவ்வொரு விளையாட்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடவிதானங்களும் அதன் மூலம் அடைந்து கொள்ளக்கூடிய இலக்குகளும் சிபார்சுசெய்யப்பட்டிருக்கவில்லை. பெரும்பாலும் அவை பயிற்சியாளர்களின் இயலுமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. பயிற்றுவித்தல் செயல்முன்னேற்றத்தினைப் பரீட்சிப்பதற்காக மாதாந்தம், காலாண்டு அல்லது வருடாந்தம் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) விளையாட்டு சக்தி செயற்திட்டம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட பொதுப் பிரமாணங்களின் பிரகாரம் அச்செயற்திட்டங்களை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதற்காக பல்வேறு உபாயமார்க்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) விளையாட்டு சக்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளகப் பயிற்சியாளர்களைப் போல வெளியகப் பயிற்சியாளர்களும் காணப்படுவதுடன் அனைத்து விளையாட்டுக்களுக்காகவும் வெளியகப் பயிற்சியாளர்களின் செயல்முன்னேற்றம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. வெளியகப் பயிற்சியாளர்கள் தொடர்பாக சிறந்த மதிப்பீட்டு முறைமை ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுவும் அவர்கள் முழுநேர பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்படுகின்றது.

(vi) ரீட் மாவத்தை விளையாட்டு கட்டிடத் தொகுதியினை மேம்படுத்துவதலினை முறையாக முகாமைத்துவம் செய்து எதிர்பார்க்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்காததன் அடிப்படையில் 219-2-2-3-2104 ஆம் செலவு விடயத்தில் ரூபா 64,003,323 தொகையான நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 10,000,000 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செய்யப்படவில்லையாயின் சேமிப்பு 42-28% ஆக இருந்திருக்கும்.

## (ஆ) விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தலும் பகிர்ந்தளித்தலும்

---

219-2-2-2103 ஆம் செலவு விடயத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 6,410,590 செலவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) மதிப்பீடு தயாரித்தலும் கொள்வனவு செய்தலும்**

* விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வருடாந்த தேவைப்பாடு இனங்காணப்பட்டிருக்காததுடன் செலவு மதிப்பீடு தயாரிக்கபபட்டிருக்கவில்லை.

* நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஆண்டிற்கான செலவுகளுக்கு நேரொத்த வகையில் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தது.

* இந்நிதி ஏற்பாட்டினை செலவு செய்வதற்கான திட்டம் ஒன்று காணப்படாததுடன் சந்தர்ப்பவசமாக உருவாகிய வேண்டுதல்களுக்காக கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தன.

**(ii) பொருட்களை பகிர்ந்தளித்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* ஒவ்வொரு ஆண்டிற்காகவும் உயர் பெறுமதி கொண்ட விளையாட்டுப் பொருட்கள் விளையாட்டுச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளிப்பதற்காக வெளிப்படைத்தன்மையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

* பல்வேறு வெளித்தரப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் அவர்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் திணைக்களத்தின் நேரடி விருப்பில் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதற்கிணங்க

விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் போது வெளிப்படைத் தன்மையினைக் காணமுடியாதிருந்தது.

* தேவைப்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல வேண்டுகோளானது பொருட்களை வழங்குவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

* விளையாட்டுப் பொருட்களை வழங்கும் போது பொருட்களை இருப்பேட்டிற்கு எடுத்துக்கொள்ளாமை, வழங்குவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமை, பொருட்கள் பெற்றுக்கொண்டமைக்காக உரிய தரப்பினர்களால் கையெழுத்திடாமை. வழங்கல்கள் உரிய பொருட்களின் கீழ் பதியப்படாது ஏனைய பொருட்களின் கீழ் பதியப்பட்டிருத்தல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

* ஒவ்வொரு தரப்பினருக்கு அல்லது விளையாட்டுச் சங்கங்களுக்கு ஒரு முறை வழங்க வேண்டிய மற்றும் வழங்கக்கூடிய உச்ச அளவு பொருட்கள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படாதிருந்ததுடன் பல்வேறு தரப்பினர்களுக்கு வெவ்வேறு அளவுகளில் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடனான இணக்கமின்மை**

திணைக்களத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2010 சனவரியிலிருந்து ஏப்ரல் வரையும் மே இலிருந்து யூலை வரையும் தனித்தனியாக இரண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஆகஸ்டிலிருந்து திசெம்பர் வரை செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 வங்கி கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

### செம்மையாக்கப்பட வேண்டிய மீதி

2010 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த செம்மையாக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | செம்மையாக்கல்கள் தொடர்பான விபரம் | 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு குறைய |
|---|---|---|
| | | ரூபா |
| (i) | தேறப்படாத வைப்புக்கள் | 8,483 |
| (ii) | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 873,323 |
| (iii) | இனங்காணப்படாத செலவுகள் | 47,000 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் 2010 திசெம்பர் 31 அளவில் நடவடிக்கை எடுக்கப்படாது 06 மாதங்களை மிகைத்த காசோலைகளின் பெறுமதி ரூபா 873,323 ஆகும்.

- நிதிப்பிரமாணம் 396 (இ) இன் பிரகாரம் பணமாக மாற்றப்படாத காசோலைகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட வேண்டிய பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

**(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளினை மீறல்**

(i) 36 ஆவது தேசிய பொது விளையாட்டு விழாவில் மரதன் மற்றும் நடத்தல் போட்டிகளுக்காக தங்குமிட வசதிகளை வழங்கும் பாடசாலைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ரூபா 600,000 தொகை தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. கொள்வனவு நடைமுறைகளினைப் பின்பற்றி இந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் இச் செயற்பாட்டிற்காக மதிப்பீடு அல்லது செய்த வேலைகளின் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 5,938,652 பெறுமதியான விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 12.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே ரூபா 3,630,500 பெறுமதியான விளையாட்டுப் பொருள் இருப்பு தேவையினை இனங்காணாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் பொருட்களுக்காக மாதிரிகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அளவிலும் வகையிலும் ஒரே மாதிரியான ரூபா 395,885 கூட்டுமொத்தமான உபகரணங்கள் ஒரே திகதியில் ஒரே நிறுவனத்திடமிருந்து சமமான இரண்டு பகுதிகளாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது கேள்வி நடைமுறையினைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்பட்ட செயற்பாடு என்பது அவதானிகப்பட்டது.

**(ஆ) ஏனையவை**

--------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உடற்பயிற்சி மண்டபத்திற்காக ரூபா 39,940,506 பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

* உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக முன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேவையான நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்படாதிருந்ததுடன் பின்னர் கொள்வனவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 24,461,200 ஆக இருந்தது. கணிப்பீட்டுத் தவறு காரணமாக அது ரூபா 24,761,500 ஆக சரிசெய்யப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் உள்ளபடியான பெறுமதி ரூபா 39,940,506 ஆக இருந்ததன் காரணமாக அந்த மதிப்பீடு மோசடியான மதிப்பீடு என்பது அவதானிக்கப்பட்டது. உள்ளபடியான செலவின் பிரகாரம் இது அமைச்சு கேள்விச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய கொள்வனவு என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

* தேவைப்பாட்டின் படி திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு வேண்டப்படாததன் காரணமாக 2010 ஆம் ஆண்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 219-02-2103 ஆம் செலவு விடயத்திற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 15,000,000 தொகைக்கு மாத்திரம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதி ஏற்பாட்டினைதக் கருத்தில் கொள்ளாததன் காரணமாக உடற்பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் ரூபா 24,940,506 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழான மாற்றல்களின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

* இந்த உபகரணங்கள் 2010 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் போது நடைபெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த பொது நலவாய நாடுகளின்

விளையாட்டுப் போட்டி மற்றும் ஆசிய நாடுகளின் விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்கான அவசரக் கொள்வனவு எனக் கருதி கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறிய நிலைமை அவசர கொள்வனவின் கீழ் எடுத்துக்கொள்ளப்படாததுடன் உரிய பொருட்கள் உரிய போட்டி முடிவடைந்து பல மாதங்களின் பின்னரே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

* பொருள் பெறுவனவுகள் உரிய முறையில் இருப்பு ஏடுகளில் பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* ரூபா 10,130,533 பெறுமதியான விளையாட்டுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அதாவது 2010 திசெம்பர் 31 ஆந் திகதி உரிய நிறுவனத்தின் பெயரில் காசோலை ஒன்று எழுதி கொடுப்பனவு செய்யப்படாது கையில் வைத்திருக்கப்பட்டது. இக்காசோலையினை செல்லுபடியற்றதாக்கி 2011 சனவரி 15 ஆந் திகதி மீண்டும் 03 காசோலைகளின் மூலம் இக்கொடுப்பனவு தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 533,300 பெறுமதியான பொருட்கள் கட்டளையின் பிரகாரம் இல்லாதிருந்ததனால் அப்பணம் கழிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய கொடுப்பனவு ரூபா 9,098,371 ஆக இருந்தது. எவ்வாறாயினும் இப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது 2011 சனவரி 18 ஆந் திகதியாக இருந்ததனால் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் கொடுப்பனவு இடம்பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இப்பொருட்கள் 2011 ஏப்ரல் வரை இருப்பேட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ii) கிராமிய விளையாட்டு மைதானத்தினை மேம்படுத்துதல்

* கிராமிய விளையாட்டு மைதானங்களுக்கு மின் ஒளியினை வழங்குவதற்காக ரூபா 168,575 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணம் 219-2-2-2001-1 என்ற செலவு விடயத்திற்குப் பதிலாக 1405-2-2-2 என்ற செலவு விடயத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

* ரூபா 33,750 செலுத்தி தேவைப்பாட்டிற்குப் பொருத்தமற்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.10 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் பொது கீழே காட்டப்பட்டுள்ள நட்டங்களும் சேதங்களும் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விலை குறைந்த விளையாட்டுப் பொருட்களுக்குப் பதிலாக விலை கூடிய பொருட்களைக் கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 1,727,676 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) நாட்டிற்கு மகுடம் கண்காட்சிக்காகவும் திணைக்கள கட்டிடங்களின் மின் வெளிச்சத்திற்காகவும் வழங்கப்பட்ட ரூபா 395,885 பெறுமதியான மீண்டும் பயன்படுத்தக்கூடிய மின்சார உபகரணங்கள் அச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

### விளையாட்டுப் பாடசாலை செயற்திட்டம்

விளையாட்டுப் பாடசாலை செயற்திட்டற்காக 2010 சனவரியிலிருந்து ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்ட ரூபா 5,284,000 தொடர்பாக பரிசோதனை செய்த போது அக்கொடுப்பனவுகள் முறையற்றவகையிலும் பயனுறுதியற்ற வகையிலும் இடம்பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.12 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறாள பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 04 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 11 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 170 | 123 | 47 |
| (iv) | ஆரம்ப நிலை | 51 | 41 | 10 |
| | மொத்தம் | 245 | 179 | 66 |

## 2.13 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்திற்குள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இல்லாததுடன் அமைச்சு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் கணக்காய்வினை மேற்கொண்டிருக்கவில்லை.